

வேலூர் மாவட்டம் குடியாத்தம் 12வதுவார்டு பகுதியில் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பணி நடைபெறுவதை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். உடன் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், நகராட்சி தலைவர் சவுந்தர்ராஜன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அர்ச்சனா நவீன் சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாவட்டத்தில்

# கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. நினைவுதினம்!

## திருவுருவச் சிலைக்கு பேரவைத் தலைவர் மு.அப்பாவு மாலை அணிவித்து மரியாதை!

நெல்லை, நவ.19-

நெல்லை மாவட்டம் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 89 வது நினைவு நாளை முன்னிட்டு நெல்லை மாநகராட்சி எதிரில் உள்ள வ.உ. சிதம்பரனார் மணிமண்டபத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களின் முழுதிருஉருவச் சிலைக்கு சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.மாநகராட்சி மேயர். கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், முன்னாள் அமைச்சர் மைதீன் கான் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

நமது நாட்டின் விடுதலைக்காக சொத்து சுகங்களையும்,சொந்த பந்தங்களையும் இழந்து போராட்டக் களத்தில் இன்னுயிர் ஈந்த தியாகிகள் ஏராளம்.அப்படிப் போராடிய தியாகச் செம்மல்தான் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள். அன்றைய கால வழக்கப்படி திண்ணைப் பள்ளி கூடத்தில் படிப்பை ஆரம்பித்தார்.இரவு நேரங்களில் ஆங்கிலக் கல்வியும் பயின்றார்.வசதியான குடும்பத்தில் பிறந்த வ.உ.சிதம்பரனார் அவர்கள் நன்றாக படித்து வழக்கறிஞர் பட்டம் பெற்று ஒழுக்கம் வாய்மை, பிறர் நலம் பேணல் ஆகிய நற்குணங்களைப் பெற்று, அவற்றை வாழ்வின் குறிக்கோள்களாக கொண்டிருந்தார்.ஆங்கிலேயர்களின்ஆதிக்கத்தை அரசியல் ரீதியாக மட்டுமல்லாமல்,வணிக ரீதியாகவும் வீழ்த்திட 'சுதேசி நேவிகேஷன் கம்பெனி" என்ற கப்பல்கம்பெனியைத் தொடங்கினார். அதனாலேயே கப்பலோட்டிய தமிழன் என்று புகழ்ப் பெற்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவு நாளை "தியாகத் திருநாள்" எனக் கடைப் பிடிக்குமாறு 3.9.2021 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள்.அதன்படி நம் தேசத்தின் விடுதலைக்காகத் தம்மையே அர்ப்பணித்தும் அயராது பாடுபட்டும்,தாய் நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்து, மறைந்தும் மக்களின் மனங்களில் என்றும் நிறைந்து வாழ்கின்ற கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 89வது நினைவு நாளை தியாகத் திருநாளாக தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு நேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது.

முதலமைச்சர் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் தியாகி களின் புகழை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதோடு, இளம் தலைமுறை யினர் சுதந்திரப் போராட்ட வீரர்களை தெரிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கான ம ணி ம ண் ட ப ங் க ள் , நினைவு சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. சுதந்திரப் போராட்டத்திற்கு பாடுபட்டவர்களை நினைவு கூர்ந்து போற்றும் அரசாக தமிழ்நாடு அரசு திகழ்ந்து வருகிறது. இவ்வாறு சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன்,பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், கனகராஜ்,நெல்லை மண்டல தலைவர் மகேஸ்வரி, மேலப்பாளையம் மண்டல தலைவர் கதிஜா இக்லாம் பாசிலா,மாமன்ற உறுப்பினர்கள் சகாய ஜூலி யட் மேரி, ராஜேஸ்வரி,உலகநாதன்,அனார்கலி, அல்லா பிச்சை, களக்காடு நகர் மன்ற துணைத்தலைவர் ராஜன்,ஒன்றிய செயலாளர் ஆரோக்கிய எட்வின், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன் உட்பட அரசு அலுவலர்கள்,கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பொன்னாப்பூர் கீழ்பாதி **பொ.செகதீசன்**

**நவம்பர் 19 (1980)**



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின்மீது கொண்ட தீவிரப் பற்றினால், கழகம் தொடங்கிய காலத்திலிருந்து தீவிரமாக கழகப் பணியாற்றியவர்.

திராவிடநாடு, முரசொலி, நம்நாடு, மாலைமணி ஆகிய கழக இதழ்களை வாங்கி, அதனை பொதுமக்களுக்கும், தோழர்களுக்கு வழங்கி கழக கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.

ஒரத்தநாடு, பொன்னாப்பூர் கீழ்பாதி கிளைக் கழகச் செயலாளராகவும், அவைத் தலைவராகவும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

1952 முதல் 1978 வரை தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவர் பதவி வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு!

நூற்றாண்டு பெருமை கண்ட நம் திராவிட இயக்கத்தின் அரசியல் அமைப்பாக அறிஞர் அண்ணா கண்டெடுத்த தி.மு.கழகத்திற்கு இது பவள விழா ஆண்டு!

இதனை முன்னிட்டு தி.மு.கழகத்தின் இளைஞர் அணி, 15.11.2025 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தமிழ்நாடு முதல்வரும், தி.மு.க. தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடத்திய 'அறிவுத் திருவிழா'வில் 'காலத்தில் நிறம் கருப்பு சிவப்பு' நூல் வெளியீட்டு விழாவும், 'இருவண்ணக் கொடிக்கு வயது 75' எனும் கருத்தரங்கமும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

திராவிட இயக்கப் போர்வாள் தலைவர் வைகோ உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரையும், நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக அழைத்து, அவர்களுக்கு நூல்களை வழங்கி அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்து விழாவுக்கு சிறப்பு சேர்த்துள்ளது தி.மு.க. இளைஞர் அணி!

அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக, 'முற்போக்கு புத்தகக் காட்சி'யையும் நவம்பர் 16 வரை ஏற்பாடு செய்து, முத்தமிழ் அறிஞர் பதிப்பகம் உள்ளிட்ட நம் தோழமை அமைப்புக்களின் பதிப்பகங்களின் நூல்களையும் விற்பனைக்காக காட்சிப்படுத்த, நாள்தோறும் அறிஞர் பெருமக்கள் உரையாற்றும் கருத்தரங்க நிகழ்ச்சிகளையும் நடத்திக் கொண்டிருக்கிறது திமுக இளைஞர் அணி!

"2026 தேர்தலில் மட்டுமல்ல, 2000 ஆண்டுக் கால ஆதிக்கத்தை எதிர்க்கும் போராட்டத்திலும் நாம் தான் வெல்வோம் என்பதை நிரூபிக்கட்டும் இந்த அறிவுத் திருவிழா!" என்று திமுக இளைஞர் அணியின் செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் 'முரசொலி'யில் (12.11.2025) சூளுரைத்திருக்கிறார்.

இத்தகைய உணர்வோடு, 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' என்ற நூலை நாம் பார்க்கிறோம்! உதயசூரியன் பின்னணியில் கலைஞரின் கம்பீரத் தோற்றத்துடன் கூடிய முத்தமிழ் அறிஞர் பதிப்பகத்தின் இலச்சினை, தி.மு.க. இளைஞர் அணியின் கம்பீரமான சின்னம், பெரியார் அண்ணா

கலைஞர், ஸ்டாலின் ஆகியோரின் கருத்தாழம் நிறைந்த படங்கள், இருவண்ணக் கொடி, நூல் குறித்த அறிமுகம் இவ்வளவு தகவல்களையும் உள்ளடக்கிய நூலின் எழில் கொஞ்சும் முகப்பு அட்டை, நூலை உடனே படிக்க வேண்டும் என்ற பேரார்வத்தை நமக்கு ஏற்படுத்துகிறது!

"கடந்த காலத்தை நினைவு கூர்ந்து, சம காலத்தின் தேவைகளை உணர்ந்து எதிர்காலத்திற் கான இலட்சியங்களை முன்னெடுக்கும் இந்த அறிவார்ந்த ஆவணத்தை உருவாக்கியதில் முத்தமிழ் அறிஞர் பதிப்பகம் பெருமை கொள்கிறது" என்ற அறிமுகத்துடன் இந்நூல் உருவான விதம், நூல் சிறக்க துணை நின்றோரின் பணி ஆகிய தகவல்களையும் உள்ளடக்கிய பதிப்பாசிரியரின் பதிப்புரை நூலின் நுழைவாயிலில் இடம்பெற்றும் நம்மோடு பேசுகிறது! இந்நூலில் அரசியல், சமூகம், பண்பாடு, பொருளாதாரம், தோழமைக் குரல்கள், கழகக் குரல்கள் என்ற ஆறு தலைப்பு களில் இடம்பெற்றுள்ள கருத்தாழமிக்க கட்டுரை கள், தமிழ் நாட்டின் சமூக நீதிக்கான போராட்ட வரலாற்றை படம்பிடித்துக் காட்டுகின்றன.

'அரசியல்'என்ற தலைப்பில்33 கட்டுரைகள், 'சமூகம்' என்ற தலைப்பில் 20 கட்டுரைகள், 'பண்பாடு' என்ற தலைப்பில் 20 கட்டுரைகள், 'பொருளாதாரம்' என்ற தலைப்பில் 6 கட்டுரைகள், 'தோழமைக்குரல்கள்' என்ற தலைப்பில் 23 கட்டுரைகள், 'கழகக் குரல்கள்' என்ற தலைப்பில் 10 கட்டுரைகள் என 112 கட்டுரைகள், தி.மு.கழகத்தின் 75 ஆண்டுக்கால வரலாற்றை ஆழ மாகவும், அடர்த்தியாகவும் இந்நூல் விவரித்து விளக்குகின்றன.

பெரியார், அண்ணா, கலைஞர் ஸ்டாலின் ஆகியவர்களின் ஆளுமைத்திறன், இன நல உணர்வு,

சங்கொலி 21.11.2025 காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு முத்தமிழறிஞர் Scanned with OKEN Scanner எதிர்ப்புகளை எதிர்கொண்ட




விதம் ஆகிய வரலாற்று நிகழ்வுகளை விவரிக்கும், தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் 'சவால்களை வென்ற சமூக நீதி இயக்கம்' என்ற தலைப்பில் அவருடனான நேர்காணல், நூலின் முகப்புக் கட்டுரையாக விளங்கி நூலுக்கு அணிசேர்க்கிறது!

திராவிட இயக்கப் போர்வாள் தலைவர் வைகோ அவர்களின் 'அகிலம் போற்றும் தி.மு.க. அரசின் சாதனைகள்' என்ற கட்டுரை, ஆட்சி பீடத்தில் அமர்ந்து தி.மு.கழகம் நிகழ்த்திய அரும்பெரும் சாதனைகளை பட்டியலிட்டுக் காட்டி, தி.மு.கழக இளைஞர் அணி, தளபதி மு.க.ஸ்டாலின் காலத்தி லும் தற்போது உதயநிதி ஸ்டாலின் காலத்திலும் இளமைத் துடிப்போடு களப்பணியாற்றுவதை சுட்டிக்காட்டி, பாராட்டும் வகையில் அமைந்துள்ளது.

ஒவ்வொரு கட்டுரைக்கும் பொருத்தமான வரலாற்று நிகழ்வுகளை நினைவு கூரும் புகைப்படங்கள், 1965 ஆம் ஆண்டு அகிலம் வியக்க நடத்திய மொழிப் புரட்சிக்கான 'முரசொலி' செய்திகளுடன் கூடிய கருத்துப்படம், மிசா காலத்தில் வெளிவந்த 'முரசொலி'யின் படங்கள், பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது கலைஞர் வெளியிட்ட கண்டன அறிக்கை 1957 தேர்தலில் வென்ற தி.மு.க. நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பி னர்களின் படங்கள், நெருக் கடி நிலையிலும் கலைஞரை காக்க கடலென திரண்டு வந்த தோழர்களின் சந்திப்பு படங்கள், திராவிட நாடு திராவிடருக்கே சென்னை தமிழருக்கே என்ற அண்ணாவின் திராவிட நாடு அறிக்கை, 1963, 1965 ஆகிய ஆண்டு முரசொலி பொங்கல் மலரில் வெளிவந்த கருத்துப்படங்கள், கலைஞர் சிலை தகர்க்கப்பட்டபோது, சின்னத்தம்பி முதுகிலே குத்தவில்லை, நெஞ்சிலேதான் குத்துகிறான் என்ற கலைஞரின் கடிதம், மிசா, தடா, பொடா முதலான அடக்குமுறை சட்டங்களை எதிர்த்து தி.மு.க. நடத்திய போராட்டப் படங்கள், அண்ணா மறைவின்போது பெரியார், கலைஞர், மதியழகன் ஆகிய தலைவர்கள், காலணிகளை கழற்றி வைத்துவிட்டு, சாலையில் பொதுமக்களோடு அமர்ந்திருக்கும் காட்சி, தி.மு.கழக கொடிகுறித்த அண்ணாவின் அறிவிப்பு(19.09.1949), நாடாளு மன்றத்தில் அண்ணா நிகழ்த்திய கன்னிப் பேச்சு, அரசமைப்புச் சட்ட அவையில் டாக்டர் அம்பேத்கர் பேசும் காட்சி, பம்பாயில் நடைபெற்ற சுய மரியாதை மாநாட்டில் அம்பேத்கர் ஆற்றிய உரை, அறிஞர் அண்ணாவின் நம் நாடு இதழின் படம், 1952 தஞ்சையில் வீசிய புயல் பாதிப்புக்கான நிவாரண நிதி, அண்ணா 500 ரூபாய், கலைஞர் 499 ரூபாய், கே.ஆர். ராமசாமி 1000 ரூபாய், மத்திய தி.மு.க. 1000 ரூபாய் என அளித்த விவரம், தி.மு.க. நடத்திய இதழ்களின் படங்கள், 145 ரூபாய் செலவில் நடைபெற்ற தி.மு.க. முதல் பொதுக்கூட்டத்திற்கு நிதி அளித்தவர்களின் பட்டியல், முதலான கடந்த 75 ஆண்டுக்கால சரித்திர நிகழ்வுகள் இந்நூல் முழுவதிலும் இடம்பெற்று நம்மை மகிழ்விக்கின்றன. 1967 தேர்தல் சிறப்பு மாநாடு, கைத்தறி நெசவாளர் களுக்கு கை கொடுத்த கழகம், நாடாளுமன்றத்தில் 'தமிழ்நாடு' பெயர் மாற்ற தி.மு.க. கோரிக்கை, 1952ஆம் ஆண்டிலேயே ஆளுநர் பதவி கூடாது என்ற தி.மு.க., பேராசிரியர் அன்பழகன் அவர் களின் 10 கட்டளைகள், தமிழில் 1957 இல் பதவி பிரமாணம் எடுத்துக் கொண்ட தி.மு.க. நாடாளு மன்ற உறுப்பினர்கள், மூன்றரை மணி நேர விவாதத்திற்குப் பின் தி.மு.க. உருவானது, தி.மு.க. உருவாகிய ஆண்டில் நடத்திய கூட்டங் கள், மாநாடு, ஏற்படுத்திய கிளைக் கழகங்கள், மாவட்டக் கழகங்கள், உறுப்பினர் எண்ணிக்கை குறித்த விவரங்கள், வங்கதேசம் மலர்ந்தபோது முதல்வர் கலைஞர் அனுப்பிய வாழ்த்து, தி.மு.க. உருவான போது அமைந்த அமைப்புக் குழு, 1952 உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க. பெற்ற முதல் வெற்றி என்பன போன்ற அரிய செய்திகள், பெட்டிச் செய்திகளாய் நூல் முழுக்க இடம்பெற்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றன.

'காலம் கழகம் களம்' என்ற தலைப்பில் தி.மு.க.ழகம் தொடங்கப்பட்ட 1949 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான முதன்மையான நிகழ்வுகளும், 'இது ஸ்டாலின் காலம்' என்ற தலைப்பில் கோபாலபுரத்தில் இளைஞர் தி.மு.க. சார்பில் அண்ணா பிறந்தநாள் விழா நடத்தப்பட்டது முதல் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.05.2021அன்று தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்றது வரையிலும், 'தொடரும் பயணம் உதயநிதி ஸ்டாலின்' என்ற தலைப்பில் 2019 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மக்களவை தேர்தலில் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம் செய்தது முதல், 2025 ஆம் ஆண்டில் 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூல் குறித்து ஆலோசனைக் குழு மற்றும் தொகுப்பு ஆசிரியர்களுடன் கலந்துரையாடிய வரையிலும் பட்டியலாக தொகுக்கப்பட்டு நூலின் நிறைவுப் பகுதியாக இடம்பெற்றுள்ளது.

**ஆ.வந்தியத்தேவன்**
கொள்கை விளக்க அணிச் செயலாளர்
ம.தி.மு.க.



நூல் வெளியீட்டு விழா தொடங்கிய ஒருசில நாட்களிலேயே ஆறாயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தன என்பது இந்நூலின் சிறப்பாகும்! கடந்த 75 ஆண்டுகால தமிழ்நாட்டின் வரலாறு, திராவிட இயக்கத்தின் வரலாறு ஆகியவைகளை 1120 பக்கங்கள் கொண்ட இந்த நூல் மிகச் சிறப்பாக தொகுத்துத் தந்துள்ளது. இளைஞர்கள், மாண வர்கள், பொதுவாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் குறிப்பாக வரலாற்று ஆய்வு மாணவர்கள் என அனைவருக்கும் பயன்தரும் வகையில் இந்நூல் வரலாற்று ஆவணமாக ஒளிவீசி மிளிர்கிறது.

மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலை மையிலான நூல் ஆலோசனைக் குழுவினருக்கும், நூலின் தொகுப்பாசிரியர்களுக்கும், வடிவமைப்பு, மெய்ப்பு திருத்தம் முதலான பணிகளை சிறப்பாக செய்து முடித்தவர்களுக்கும், நூல் வெளிவர சுற்றிச்சுழன்று களப்பணி ஆற்றியவர்களுக்கும் மறுமலர்ச்சி தி.மு.க. ழகத்தின் சார்பிலும், சங்கொலி ஏட்டின் சார்பிலும் பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்! அரசியல், சமூகம், பண்பாடு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் தி.மு.க.ழகம் நிகழ்த்திய சாதனைகளின் தொகுப்பான இந்நூலின் விலை ரூபாய் 750/

**தொடர்புக்கு: முத்தமிழ் அறிஞர் பதிப்பகம், அன்பகம், 614, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. தொலைபேசி : 044 – 2434 9970/90033 24473.**

**-நன்றி**
**சங்கொலி**
**21.11.2025**



பரமக்குடி சட்டமன்றத் தொகுதி பரமக்குடி தெற்கு நகர் 36,37,38,39,48,49 ஆகிய பாகங்களை உள்ளடக்கிய பகுதிகளில் நடைபெற்று வரும் SIR பணிகளை மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் முன்னாள் அமைச்சர் மருத்துவர் சுந்தர்ராஜ்,பரமக்குடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கொடி சந்திர சேகர்,நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி ,நகர் மன்ற உறுப்பினர்கள்,நகர் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### கோவை தெற்கு மாவட்டம்

# சுல்தான்பேட்டை மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை தெற்கு மாவட்டம், சுல்தான்பேட்டை மேற்கு ஒன்றியச் செயலாளர் பி.வி.மகாலிங்கம் அவர்களுக்குப் பதிலாக **ஆர்.ரமேஷ்** (2/20, சித்தநாயக்கன்பாளையம், செலக்கரிச்சல், கோவை மாவட்டம்) அவர்கள் சுல்தான்பேட்டை மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை- 600 018. நாள்: 18.11.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.